# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# Provincial Department of Education – Northern Province

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) நிலையறி பரீட்சை - 2021
## General Certificate of Education (Adv – Level) Diagnostic Examination - 2021

| | | |
|---|---|---|
| தரம் :- 13 (2021)<br>Grade :- 13 (2021) | இலங்கை வரலாறு I<br>Srilankan Histroy I | நேரம் :- 3 மணித்தியாலம்<br>Time :- Three hours |
| சுட்டெண்:................................ | 25 \| T \| I | மேலதிக வாசிப்பு நேரம் :-<br>10 நிமிடம் |

**வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**இலங்கை வரலாறு – ஆதிகாலம் முதல் கி.பி. 1978 வரை**

**அறிவுறுத்தல்கள்:**

- இப்பகுதி 40 வினாக்களைக் கொண்டுள்ளது. **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத் தாளிலேயே** விடை தருக.
- ஒவ்வொரு வினாவிற்கும் தரப்பட்டுள்ள **ஐந்து** தெரிவுகளில் **ஒன்று** மட்டுமே சரியானது. அச்சரியான விடையைத் தெரிவு செய்து தரப்பட்டுள்ள **அறிவுறுத்தல்களிற் கேற்ப உமது விடையைக் குறிக்குக.**
- பகுதி Iற்கு 40 புள்ளிகள் வழங்கப்படும்.
- **இரண்டு** பகுதிகளிற்கும் வழங்கப்பட்டுள்ள நேரம் **மூன்று மணித்தியாலங்கள் ஆகும்.** விடைகளை எழுதி முடித்த பின்னர், பகுதி Iற்கான விடைத்தாள்களை பகுதி IIஇற்கான விடைத்தாள்களுடன் **இணைத்துக் கையளிக்குக**.

### பகுதி- I

- 1 தொடக்கம் 10 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து** பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அப்பெயர்களுள் **ஒன்று** ஏதோவொரு காரணத்தினால் ஏனையவற்றுடன் **பொருந்தாது. பொருந்தாத** பெயரை இனங்கண்டு அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

**1.** (1) பட்டதொம்பலன (2) புந்தல (3) பெலிலென
(4) அலிகல (5) மகாகம (……..)

**2.** (1) சூகரதித்த (2) கச்சகதித்த (3) காலதித்த
(4) நில்வளதித்த (5) ஜிம்மதித்த (……..)

**3.** (1) ஜினகலாமாலி (2) ஜானகிகரண (3) சியபஸ்லகர
(4) ராஜாவலிய (5) ரசவாஹினி (……..)

**4.** (1) ரிபைரோ (2) குவைரோஸ் (3) பெல்தியஸ்
(4) வெலன்டைன் (5) அல்புரூனி (……..)

**5.** (1) ஆசனகர (2) சிலைமனை (3) வட்டதாதுமனை
(4) பொக்குனமனை (5) போயாமனை (…….)

**6.** (1) ஜெயவீர (2) கனகசூரிய (3) விக்கிரம
(4) சப்புமல்குமாரய (5) விஜய கூழங்கை (……..)

**7.** (1) ஜேதவன விகாரை (2) அபய கிரி விகாரை (3) மின்னேரி விகாரை
(4) கோகண்ண விகாரை (5) இறக்கவில் விகாரை (……..)

**8.** (1)லோறன்சோ த அல்மேடா (2)பேரோ லோபஸ்த சூசா (3)தொன் ஜெரனிமோத அசவிடோ
(4) ஜோரிஸ்வான் ஸ்பில்பேர்கன் (5) தியாகு த மெலோ கஸ்ரோ (……..)

**9.** (1) சிறிவிஜயராஜசிங்கன் (2) கீர்த்தி சிறிஇராஜசிங்கன் (3) 2ம் இராஜசிங்கன்
(4) இராஜாதி இராஜசிங்கன் (5) சிறிவிக்கிரம இராஜசிங்கன் (……..)

**10.** (1) கெப்பட்டிபொல (2) எகலபொல (3) மடுகல்ல
(4) வீரபுரன்அப்பு (5) கலகெதர மொகட்டால (……..)

- **11**தொடக்கம் **15**வரையிலுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து சோடிகள்** தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடனொன்று **பொருந்தவில்லை**. அவ்வாறு **பொருந்தாத** சோடியினை இனங்கண்டு அதன் **இலக்கத்தை எதிரேயுள்ள அடைப்புக் குறிக்குள்** எழுதுக.

**11.** (1) மிகிந்தலை சுவர்க் கல்வெட்டு - விகாரைகளின் நிர்வாகம்
(2) வேவல்கட்டிய கல்வெட்டு - கிராமத்தில் கடமை புரிவது தொடர்பான சட்டதிட்டங்கள்
(3) சித்துல்பவ்வ கல்வெட்டு - நீதிமன்றத்தால் விதிக்கப்படும் தண்டனைப் பணம் பற்றியது
(4) கதுருவெல கல்வெட்டு - ஐந்து அமைச்சர் பரம்பரை பற்றியது
(5) வெஸ்ஸகிரிய கல்வெட்டு - சந்தையொன்றின் நிர்வாகம் பற்றியது (……..)

**12.** (1) விசுத்திமார்க்க - மகாநாமதேரர்
(2) நிகாயசங்கிரகய - தேவரக்சித ஜெயபாகு தர்மரக்சிததேரர்
(3) சிங்கள போதிவங்சய - வில்கம்முல தேரர்
(4) சரார்த்த சங்கிரகய - புத்தகோசதேரர்
(5) தம்பியா அட்டுவா கெட்டபதய- 5ஆம் காசியப்பன் (……..)

**13.** (1) கதம்பநதி - மல்வத்துஓயா
(2) வனநதி - வளவகங்கை
(3) கோணநதி - கலாஓயா
(4) கும்புக்கன்ஓயா - கரிந்தநதி
(5) கப்பறகந்தநதி - மாணிக்க கங்கை (……..)

**14.** (1) ராஜகாரியமுறை ஒழித்தல் - பிரட்ரிக் நோர்த்
(2) மலையக இராச்சியம் வீழ்ச்சியடைதல் - றொபேட் பிறவுண்றிக்
(3) கொழும்பு கண்டி பாதை அமைத்தமை - தோமஸ்மெயிற்லண்ட்
(4) பெரிய நகரசபைகள் அமைத்தல் - ஹர்கியுலிஸ் றொபின்சன்
(5) தானிய வரியை நீக்கியமை - ஆதர் ஹொவ்லொக் (……..)

**15.** (1) கொழும்பு அக்கடமி - மெக்கன்சி ஆளுநர் குழு
(2) பல்கலைக்கழக கல்லூரி - மோர்கன் ஆணைக்குழு
(3) மத்தியகல்லூரி ஆரம்பம் - டொனமூர் ஆணைக்குழு
(4) பாடசாலை சபைகள் - கோல்புறூக் ஆணைக்குழு
(5) இலவசக் கல்வி - சோல்பரி ஆணைக்குழு (……..)

- **16**தொடக்கம் **20**வரையிலுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் சில பெயர்கள்/ கூற்றுக்கள்/திகதிகளின் தொகுதிகள் **X, Y** என்னும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. **Y** நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள்/கூற்றுக்கள்/திகதிகள் **X** நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோவொரு வகையில் தொடர்புபட்டவை. ஆனால் அவை சரியான தொடரொழுங்கில் **தரப்படவில்லை. Y** நிரலில் உள்ளவற்றை **X** நிரலில் உள்ளவற்றிற்கேற்ப சரியாக ஒழுங்குபடுத்தும்போது கீழே தரப்பட்டுள்ள ஐந்து சேர்மானங்களுள் ஒன்று சரியானதாகும். சரியான அச்சேர்மானத்தின் **இலக்கத்தை தெரிவு செய்து அடைப்புக் குறிக்குள்** எழுதுக.

**16.**

| X | Y |
|---|---|
| (i) தாதுசேனன் | A. கந்தளாய்குளம் |
| (ii) மகா பராக்கிரமபாகு | B. பத்தபாசன வாவி |
| (iii) Iம் அக்போ | C. குருந்த வாவி |
| (iv) IIம் அக்போ | D. கலாவாவி |
| (v) 2ம் முகலன் | E. பராக்கிரமசமுத்திரம் |

(1) DECBA (2) DCEBA (3) DECAB (4) DCEAB (5) BACED (……..)

**17.**

| X | Y |
|---|---|
| (i) சியபஸ்ஸகர | A. 2ம் பராக்கிரமபாகு |
| (ii) சரார்த்சங்கிரக | B. விதாகமைத்திரிய |
| (iii) லோவடசங்கிராவ | C. ஸ்ரீராமச்சந்திரபாரதி |
| (iv) பக்தி சதகம் | D. புத்ததாசன் |
| (v) கவிசிலுமின | E. நான்காம்சேனன் |

(1) DEABC (2) EBCDA (3) BCDEA (4) EDBCA (5) EDBAC (……..)

**18.**

| X | Y |
|---|---|
| (i) 1ம் விஜயபாகு மன்னன் | A. கலிகால சாகித்ய சர்வக்ஞ பண்டித |
| (ii) 1ம் பராக்கிரமபாகு மன்னன் | B. யாழ்ப்பாண இராசதானியை வெற்றிகொள்ளல் |
| (iii) 2ம் பராக்கிரமபாகு மன்னன் | C. சோழரை இலங்கையிலிருந்து விரட்டியமை |
| (iv) 6ம் பராக்கிரமபாகு மன்னன் | D. பர்மா மீதான ஆக்கிரமிப்பு |
| (v) நிஸ்ஸங்கமல்ல மன்னன் | E. துலாபார தானம் வழங்கியமை |

(1) CABED (2) CDEBA (3) CDEAB (4) CEABD (5) CDABE (……..)

**19.**

| X | Y |
|---|---|
| (i) கரைநாடு, மலைநாடு இணைக்கப்பட்டமை | A. டொனமூர் யாப்பு |
| (ii) வரையறுக்கப்பட்ட வாக்குரிமை | B. மனிங் யாப்பு |
| (iii) பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் | C. குறுமக்கலம் யாப்பு |
| (iv) அரசுக் கழகம் அறிமுகம் | D. சோல்பரி யாப்பு |
| (v) அமைச்சரவை (கபினட்) அறிமுகம் | E. கோல்புறூக் யாப்பு |

(1) CBEAD (2) EDCAB (3) ECBAD (4) BCEDA (5) ABCDE (……..)

**20.**

| X | Y |
|---|---|
| (i) தாழ்நில உற்பத்தியாளர் சங்கம் | A .எஸ்.ஏ.விக்கிரமசிங்க |
| (ii) சிலாபச் சங்கம் | B.விக்ரர் கொரயா |
| (iii) இலங்கைத் தேசிய காங்கிரஸ் | C.சார்ள்ஸ் டி சொய்சா |
| (iv) இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி | D.பொன்னம்பலம் அருணாச்சலம் |
| (v) அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | E.ஜீ.ஜீ.பொன்னம்பலம் |

(1) BEACD (2) CBDAE (3) CDAEB (4) DEACB (5) EDABC (……..)

- **21**தொடக்கம் **25**வரையிலுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஒரு தலைப்பின் கீழ் **ஐந்து** விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று **உரிய தலைப்பிற்குப் பொருந்தாதுள்ளது**. அதனைத் தெரிவு செய்து, அதன் **இலக்கத்தை எதிரேயுள்ள அடைப்புக் குறிக்குள்** எழுதுக.

**21. ஆரம்ப வரலாற்றுக் காலம்**

(1) சிறிய குளக் கிராமங்களாக வளர்ச்சியடைந்தது
(2) ஒரு கிராமத்தில் 5-25க்கு இடைப்பட்ட குடும்பங்கள் வாழ்ந்ததாகக் கருதப்படுகின்றது
(3) கிராமத்தின் தலைவர் கமிக எனப்பட்டார்
(4) தொழிலை அடிப்படையாகக் கொண்டே கிராமங்கள் உருவானது
(5) இறந்தவர்களை அடக்கம் செய்ய பெரிய கற்களைப் பயன்படுத்தி கல்லறை கட்டும் மரபு காணப்பட்டது. (……..)

**22. ஜாவா மன்னன் சந்திரபானு**

(1) ஜாவா மன்னன் சந்திரபானுவின் முதலாவது படையெடுப்பு கி.பி.1215ல் நடைபெற்றது
(2)தென்கிழக்காசியாவின் தாமிரலிங்க தேசத்திலிருந்து (லிகோர் பிரதேசம்) வந்த படையெடுப்பாளன்
(3) 2ம் பராக்கிரமபாகுவினால் தோற்கடிக்கப்பட்டான்
(4) இவனால் கி.பி.1261/ 1262 காலப்பகுதியில் யாப்பகூவா இராசதானி ஆக்கிரமிக்கப்பட்டது.
(5) ஜாவா மன்னன் சந்திரபானு யாழ்ப்பாணத்தில் (சாவச்சேரி,சாலன்கோட்டை) தனது அதிகாரத்தை கட்டியெழுப்பியதாக நம்பப்படுகிறது. (……..)

**23. இராஜரட்டையில் சோழரின் ஆட்சி**

(1) முதலாம் இராஜேந்திரன் இலங்கையை ஆக்கிரமித்து ஐந்தாம் மகிந்தனைக் கைது செய்து இந்தியாவிற்குக் கொண்டு சென்றான்
(2) சோழரின் நிர்வாக மத்தியஸ்தானமாக இருந்தது பொலன்னறுவையாகும்.
(3) இலங்கையின் சோழராட்சி நிலவிய பிரதேசத்தை உள்ளடக்கிய நிர்வாக அலகு ‘‘மும்முடிச் சோழ மண்டலம்’’ எனப்பட்டது
(4) திருகோணமலையில் வெல்கம விகாரை சோழரின் ஆட்சியின் போது ராஜராஜ பெரும்பள்ளி என்று குறிப்பிடப்பட்டது
(5) சோழர்களை இந்நாட்டிலிருந்து வெளியேற்றிய கலிங்கமாகன் இராசரட்டையில் தனது ஆட்சியை நிலைநிறுத்தினான். (……..)

**24. பொன்னம்பலம் அருணாச்சலம்**

(1) சிறப்புமிக்க நிர்வாக அதிகாரியாக விளங்கினார்
(2) இவர் ‘‘இலங்கை வரலாற்றுக் குறிப்பு’’ என்ற நூலை எழுதினார்.
(3) பல்கலைக்கழகமொன்றினை நிறுவுவதற்குப் போராடினார்.
(4) இலங்கையின் முதலாவது சட்டவாக்கக்கழகப் பிரதிநிதியாகத் தொரிவானார்
(5) இலங்கைத் தேசிய காங்கிரஸின் முதலாவது தலைவராவார் (……..)

**25. பத்தொன்பதாம் நூற்றாண்டில் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை**

(1) லூல்கந்துரவில் ஜேம்ஸ் ரெயிலரினால் தேயிலை பயிர்ச் செய்கை ஆரம்பிக்கப்பட்டது
(2) தேயிலைப் பயிர்ச் செய்கையின் வளர்ச்சிக்கு லண்டன் சந்தையில் தேயிலையின் விலை அதிகரித்தமையும் ஒரு காரணமாகும்
(3) கோப்பிப் பயிர்செய்கையின் வீழ்ச்சியின் பின்னர் சிங்கோனா மற்றும் கொக்கோ பயிர்ச் செய்கை ஆரம்பிக்கப்பட்டது.
(4)இறப்பர் 19ம் நூற்றாண்டின் இறுதி தசாப்தங்களில் நாட்டின் பாரிய ஏற்றுமதிப் பண்டமாக காணப்பட்டது
(5) பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைக்குத் தேவையான போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுக்கும் நோக்கில் பெருந்தெருக்கள் அமைக்கப்பட்டது. (……..)

- **26**தொடக்கம் **30**வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **(A), (B), (C), (D)** என்னும் நான்கு தெரிவுகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் **ஒன்று** அல்லது **பல** சரியானது விடையாகும். சரியான விடை அல்லது விடைகளைத் தெரிவு செய்து,

  **(A)** யும் (**B**) யும் மாத்திரம் சரியாயின்………………………………………1 எனவும்

  **(A)** யும் (**C**) யும் மாத்திரம் சரியாயின் …………………………………….2 எனவும்

  **(B)** யும் (**C**) யும் மாத்திரம் சரியாயின்…………………………………....**3** எனவும்

  **(C)** யும் (**D**) யும் மாத்திரம் சரியாயின்……………………………………..4 எனவும்

  **வேறு** விடைகளின் எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரியாயின்…….**5** எனவும்

**அடைப்புக் குறிக்குள்** எழுதுக.

| அறிவுறுத்தல்களின் சுருக்கம் | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| **(A)** யும் **(B)** யும் மாத்திரம் சரி | **(A)** யும் **(C)** யும் மாத்திரம் சரி | **(B)** யும் **(C)** யும் மாத்திரம் சரி | **(C)** யும் **(D)**யும் மாத்திரம் சரி | **வேறு விடைகளின்** எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரி |

**26. இலங்கை வரலாற்றில் செல்வாக்கு செலுத்தும் புவியியற் காரணிகள் தொடர்பாக சரியானது / சரியானவை.**

(A) இந்தியாவிற்கு அண்மையில் அமைந்திருத்தல்

(B) இந்தியாவிலிருந்து பிரிக்கப்பட்டு இந்துசமுத்திரத்திலே ஒரு தீவாக இருத்தல்

(C) பெரியதும் பாதுகாப்பானதுமான ஒரு இயற்கைத் துறைமுகத்தினைக் கொண்டிருத்தல்

(D) மத்தியில் உள்ள மலைப்பிரதேசம் (……..)

**27. சீகிரியா தொடர்பான மேல்வரும் குறிப்புக்களில் எது/எவை சரியானது/சரியானவை.**

(A) தாதுசேனன் இதன் ஆரம்ப வேலைகளைச் செய்வித்தான்

(B) முதலாம் முகலன் இதை மேலும் மெருகுபடுத்தினான்

(C) சீகிரியா முதலாம் காசியப்பன் ஆட்சித் தளமாகும்

(D) முதலாம் காசியப்பன் சிகிரியாவின் உச்சியில் ஓர் உன்னதமான அரண்மனையைக் கட்டினான் (……..)

**28. முதலாம் பராக்கிரமபாகு மன்னனின் வெளிநாட்டு உறவுகள் தொடர்பாக பின்வரும் கூற்றுக்களில் எது/எவை/ சரியானது/சரியானவை**

(A) பர்மா மீதான படையெடுப்பு

(B) கம்போடியாவுடனான சினேகபூர்வ உறவுகள்

(C) சந்திரபானு என்னும் ஜாவா மன்னனை தோற்கடித்தமை

(D) கலிங்கமாகனைத் தோற்கடித்தமை (……..)

**29. 1848 பிரித்தானியரிற்கு எதிரான கலகம் ஏற்பட்டமை தொடர்பாக பின்வரும் கூற்றுக்களில் எது/எவை சரியானவை/சரியானது.**

(A) போராட்டத்தின் மத்திய நிலையமாக ஊவாவெல்லச விளங்கியமை.

(B) புரட்சியாளர்களால் கொங்கொலகொட பண்டா மன்னனாக முடிசூடப்பட்டமை.

(C) நிலத்தை வெளிநாட்டவரிற்கு விற்கும் கொள்கை காரணமாக மலையகத்தவர் மத்தியில் அதிருப்தி / அவநம்பிக்கை ஏற்பட்டமை.

(D) புனிததந்ததாது கிளர்ச்சியாளர்களின் கைவசமானதனால் அவர்களது உற்சாகம் அதிகரித்தமை. (……..)

**30. சுதந்திரத்தின் பின்னர் எமது நாட்டின் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளில் எது /எவை சரியானது /சரியானவை**

(A) பொருளாதார அபிவிருத்தியின் பொருட்டு இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனங்கள் ஆரம்பிக்கப்பட்டது

(B) தலைமன்னாரில் இருந்து தனுஸ்கோடி வரை படகுச் சேவை ஒன்று ஆரம்பித்தமை

(C) இலங்கை வங்கி, மக்கள் வங்கி எனும் வங்கிகள் உருவாக்கப்பட்டமை

(D) தனியார் முதலீட்டாளர்களிற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் அரச தலையிடாக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது. (……..)

- **31** தொடக்கம் **35** வரையிலுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் **இலக்கத்தை அடைப்புக் குறிக்குள்** எழுதுக.

**31. இலம்பகர்ண வம்சத்தின் முதலாவது அரசன்**

(1) வசபன் (2) மகாநாகன் (3) யட்டதாலதிஸன்
(4) தாதுசேனன் (5) வங்கநாசிகதீஸன் (……..)

**32. பின்வரும் இந்து ஆலயங்களில் சீதாவாக்கை இராச்சியத்தில் கட்டப்பட்டது எது?**

(1) திருக்கேதீஸ்வரம் (2) முன்னேஸ்வரம் (3) நல்லூர்
(4) கோணேஸ்வரம் (5) பெரண்டிக்கோயில்
(……..)

**33. ஆங்கில கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியினரினால் 1762ம் ஆண்டில் கண்டி இராச்சியத்திற்கு தூதுவராக அனுப்பப்பட்டவர் யார்?**

(1) றொபேட் நொக்ஸ் (2) ஜோன்பைபஸ் (3) கியூ பொயிட்
(4) றொபேட் அன்றூஸ் (5) ஜோன் டொயிலி (……..)

**34. அரசாங்க சபையின் முதல் பெண் அங்கத்தவர் யார்?**

(1) அட்லின் மொலமுறே (2) மேரி இரட்ணம் (3) டொறின் விக்கிரமசிங்க
(4) விவியன் குணவர்த்தன (5)குசுமா குணவர்த்தன (……..)

**35. சுதந்திர இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி யார்?**

(1) ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க (2) சந்திரிக்கா பண்டாரநாயக்க (3) ஜே.ஆர்.ஜெயவர்த்தன
(4) ரணசிங்க பிரேமதாசா (5)வில்லியம் கோபல்லாவ (……..)

- **36**தொடக்கம் **40**வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு வகையான கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள கூற்றுச் சோடிக்குக் கீழேயுள்ள அட்டவணையில் காணப்படும் **1, 2, 3, 4, 5** என்பவற்றில் மிகவும் பொருத்தமானதைத் தெரிவு செய்து அதன் **இலக்கத்தை அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

| | **முதலாம் கூற்று** | **இரண்டாம் கூற்று** |
|---|---|---|
| **1** | சரியானது | பிழையானது |
| **2** | சரியானது | சரியானது |
| **3** | பிழையானது | பிழையானது |
| **4** | பிழையானது | சரியானது |
| **5** | சரியானது | சரியானதாக இருப்பதுடன் முதலாவது கூற்றை மேலும் விபரிக்கின்றது. |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று | |
|---|---|---|---|
| **36.** | பண்டுகாபயனால் அனுராதபுரத்தில் முதலாவது தலைநகரம் அமைக்கப்பட்டது. | மூத்தசிவனால் மகாமேகவனப் பூங்கா அமைக்கப்பட்டது | (…...) |
| **37.** | கலிங்கமாகனது படையெடுப்பு பொலன்னறுவை இராச்சியத்தின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது. | கம்பளையை 2ஆம் புவனேகபாகு மன்னன் தலைநகரமாக்கினான் | (…….) |
| **38.** | கோப்பிட்டிகம எனுமிடத்தில் இருந்த வியாபாரநிலையம் பற்றிய விபரங்களை வேவல்கட்டிய கல்வெட்டு கூறுகின்றது. | உத்தரராமய என்பதை நிஸங்கமல்ல மன்னன் கட்டினான் என கருதப்படுகின்றது. | (…….) |
| **39.** | இப்பன் கட்டுவ மெகாலிதிக் முன் வரலாற்றுக்கால மயானமாகும். | சீன யாத்திரிகனாகிய பாகியன் கி.பி. 411ல் இலங்கை வந்து இரு ஆண்டுகள் அபயகிரி விகாரையில் தங்கினார் . | (…….) |
| **40.** | 1960 ஜீலை மாத தேர்தலில் வெற்றி பெற்று சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சி அமைத்தது. | பண்டாரநாயக்கா அவர்களின் மக்கள் மயப்படுத்தும் திட்டம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினால் முன்னெடுக்கப்பட்டது. | (…….) |

**✱✱**

(40X1= 40 புள்ளிகள்)

# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education – Northern Province

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) நிலையறி பரீட்சை - 2021
## General Certificate of Education (Adv – Level) Diagnostic Examination - 2021

| | | |
|---|---|---|
| தரம் :- 13 (2021)<br>Grade :- 13 (2021) | இலங்கை வரலாறு I<br>Srilankan Histroy I | 25 \| T \| I |

**இலங்கை வரலாறு – ஆதிகாலம் முதல் கி.பி 1978 வரை**

**அறிவுறுத்தல்கள்:-**

- **முதலாம்** வினா கட்டாயமானது.
- **முதலாம்** வினாவிற்கும் B,C ஆகிய ஒவ்வொரு பகுதியில் இருந்தும் **ஒரு** வினாவையேனும் தெரிவு செய்து மேலும் **மூன்று** வினாக்களுக்கு விடை எழுதுக.

(**முதலாம்** வினாவிற்கு விடையளிப்பதற்கு **இலங்கையின் புறவுருவப்படம்** வழங்கப்பட்டுள்ளது)

### பகுதி A

1. உமக்கு வழங்கப்பட்டுள்ள புறவுருவப்படத்தில் கீழே தரப்பட்டுள்ள **எல்லா இடங்களையும் குறித்துப் பெயரிடுக.**

(i) ஊராத்தோட்டை
(ii) கற்பிட்டி
(iii) நல்லூர்
(iv) லங்காபட்டுன
(v) சேனநாயக்க சமுத்திரம்
(vi) மத்தியமாகாணம்
(vii) பாகியன்கல
(viii) கோட்டை
(ix) குாலி
(x) மகியங்கனை
(xi) மட்டக்களப்பு
(xii) குருநாகல்

(12 புள்ளிகள்)

### பகுதி B

2. "துட்டகைமுனுவின் சாதனைகளை மகாவம்சம் மிகைப்படுத்திப் புகழ்ந்துள்ளது."

(i) துட்டகைமுனுவின் தந்தையார் பெயர் யாது? (01 புள்ளி)

(ii) துட்டகைமுனுவிற்கு முன்னர் மகாகமவில் ஆட்சிபுரிந்த மன்னர்கள் **இருவரை** பெயரிடுக.? (02 புள்ளிகள்)

(iii) துட்டகைமுனுவின் அரசியல் சாதனைகளை சுருக்கமாக குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iv) "துட்டகைமுனுவின் வரலாற்றுச் சாதனைகளை மகாவம்சம் மிகைப்படுத்திக் கூறியுள்ளது" என்பதை ஆராய்க. (09 புள்ளிகள்)

3. பொலநறுவை அரசியலில் நிஸங்கமல்ல மன்னனின் வரலாற்றுச் சாதனைகளின் முக்கியத்துவத்தினை ஆராய்க. (16 புள்ளிகள்)

4. வரலாற்றை வடிவமைப்பதில் உள்ளூர் புவியியற்காரணிகள் செல்வாக்குச் செலுத்திய விதத்தை பின்வரும் தலைப்புக்களின் கீழ் ஆராய்க.

**(i)** மத்திய மலைநாடு
**(ii)** இந்தியாவிற்கு அண்மையில் அமைந்திருத்தல்
**(iii)** துறைமுகங்கள் (16புள்ளிகள்)

**5.** பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் **இரண்டிற்கு** அவற்றின் வரலாற்று முக்கியத்துவம் தொடர்பான சிறுகுறிப்பு எழுதுக.

(i) அனுராதபுர கால தென்னிந்தியப் படையெடுப்புக்கள்
(ii) தம்பதெனியா கால இலக்கியம்
(iii) யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்
(iv) 6ம் பராக்கிரமபாகு (8 x 2 =16 புள்ளிகள்)

## பகுதி C

**6.** கண்டி இராசதானியின் வீழ்ச்சிக்கு வழிவகுத்த காரணிகளை நுணுக்கமாக பரிசீலனை செய்க. (16புள்ளிகள்)

**7.** "பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை வளர்ச்சியானது பொருளாதாரத்துறையில் மட்டுமன்றி சமுதாயத்திலும் பத்தொன்பதாம் நூற்றாண்டிலே குறிப்பிடத்தக்க மாற்றத்தினை ஏற்படுத்தியது".

(i) பெருந்தோட்டத்துறை அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்கு சிபாரிசு வழங்கிய ஆணைக்குழு யாது? (01 புள்ளி)
(ii) பெருந்தோட்டத்துறையில் இடம்பெற்ற **இரண்டு** வர்த்தகப் பயிர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
(iii) பெருந்தோட்டங்களை உருவாக்குவதற்கு நிலம், தொழிலாளர் சேவை என்பவற்றைப் பெற்றுக்கொண்ட முறையினைப் பற்றி சுருக்கமாக குறிப்பிடுக. (04 புள்ளிகள்)
(iv) மேலே தரப்பட்ட கூற்றினை பெருந்தோட்ட விவசாய முறையின் விளைவுகளுடன் தொடர்புபடுத்தி ஆராய்க? (09 புள்ளிகள்)

**8.** 1978ம் ஆண்டு இரண்டாம் குடியரசு யாப்பின் பிரதான அம்சங்களை பரிசீலனை செய்க. ( 16 புள்ளிகள்)

**9.** பின்வருவனற்றுள் எவையேனும் **இரண்டினது** வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) வெலிவிட்ட ஸ்ரீ சரணங்கர தேரர்
(ii) கரையோர மாகாணங்களில் ஒல்லாந்தரின் நிர்வாகமுறை
(iii) விவசாயக் குடியேற்றத்திட்டங்கள்
(iv) சீதாவாக்கை இராசதானி

(8X2 = 16 புள்ளிகள்)

***

# மாகாணக் கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்
## Provincial Department of Education – Northern Province

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) நிலையறி பரீட்சை - 2021
**General Certificate of Education (Adv – Level) Diagnostic Examination - 2021**

| | | |
|---|---|---|
| தரம் :- 13 (2021)<br>Grade :- 13 (2021) | இலங்கை வரலாறு I<br>Srilankan Histroy I | 25 T I |

பகுதி **A**

**1.**

